**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**அ.வ..எண்.122/18** **நாள்.20.10.2021**

2021 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 ம் நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சடையக்ககவுண்டர் | சாதி | |
| கிராமம் | மேல்மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 70 |

**வா.சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1 -ம் சாட்சி ஆவேன். நான் **வா.சா.1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வா.த.சா.1 –19.07.1992 தேதியிட்ட கூர்சீட்டு அசல்.

2.வா.த.சா.2- 17.02.1995 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல்.

3.வா.த.சா.3- 03.04.2014 தேதியிட்ட 1 ம் பிரதிவாதி பட்டு சாமி என்பவருக்கு எழுதிகொடுத்த அடமான பத்திரம் அசல்.

4.வா.த.சா.4- 26.04.2018 தேதியிட்ட 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் சான்றிட்ட நகல்.

5.வா.த.சா.5- 07.05.2018 தேதியிட்ட விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு 1 ம் வாதி கொடுத்த மனு.

6.வா.த.சா..6- 06.06.2018 தேதியிட்ட திண்டிவனம் சார் ஆட்சியர் மேல்மலையனூர் வட்டாட்சியருக்கு அனுப்பிய குறிப்பாணை.

7.வா.த.சா.7- 21.05.2018 தேதியிட்ட 2 ம் பிரதிவாதிக்கு வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்.

8.வா.த.சா.8- 18.05.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 3 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்.

9.வா.த.சா.9-வழக்கறிஞர் அறிவிப்பை 2 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பபெற்ற அஞ்சலக உறை அசல்.

10.வா.த.சா.10. 26.05.2018 தேதியிட்ட 1 ம் பிரதிவாதிக்கு வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்.

11.வா.த.சா.11-28.05.2018 தேதியிட்ட 1 ம்பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்.

12.வா.த.சா.12—21.06.2018 தேதியிட்ட 1 ம்பிரதிவாதின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு.,

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**